SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

பெயர் : பாடம் - தமிழ் தேதி: **10.12.19**

வகுப்பு : 5 **மாதத்தேர்வு - டிசம்பர்** - 2019 மதிப்பெண்கள் : 30

**I. சரியான விடையினைத் தேர்ந்து எடுத்து எழுதுக.** (10)

1. தலைமையாசிரியர் - பிரித்து எழுதக் கிடைப்பது________

அ. தலைமை + யாசிரியர் ஆ. தலைமை + ஆசிரியர்

2. வையகம் என்பதன் பொருள் ___________

அ. ஊர் ஆ. உலகம்

3. இன்பம் என்பதன் எதிர்ச்சொல் ________

அ. மகிழ்ச்சி ஆ. கவலை

4. அழைப்பு + இதழ் சேர்த்து எழுதக் கிடைப்பது __________

அ. அழைப்புஇதழ் ஆ. அழைப்பிதழ்

5. மாணவனை ஆசிரியர் ____________ என போற்றினார்.

அ. வருக வருக ஆ. வாழ்க வாழ்க

6. இரண்டு முறைக்குமேல் அடுக்கி வராதது ________

அ. அடுக்குத்தொடர் ஆ. இரட்டைக்கிளவி

7. முத்தமிழ் _________

அ. இயல், இசை, நாடகம் ஆ. சேரர் , சோழர் , பாண்டியர்

8. கல்தச்சரின் பெயர் _____

அ. கந்தசாமி ஆ. முருகேசன்

9. உழவுப்பொங்கலின் ஆசிரியர் __________

அ. பாரதியார்  ஆ. நாமக்கல் வெ. இராமலிங்கம்

10. அனுமதி - இச்சொல் குறிக்கும் பொருள் ________

அ. கட்டளை  ஆ. வழிவிடு

**II. பின்வரும் படத்தைப் பற்றி 4 வரிகள் எழுதுக.** (4)

11. **கூட்டுக் குடும்பம்**



**III. பத்தியைப் படித்து விடையளி:** (5)

நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படும் குமரி மாவட்டத்தில்1908 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் சுடலைமுத்து - இசக்கியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். இளம் வயதிலேயே கல்வியை இழந்த இவர் குடும்பத்திற்கு உதவிட நாடக அரங்குகளில் சேர்ந்து சிரிக்க சிரிக்கப் பேசி மக்களைச் சிந்திக்கவும் வைப்பார். பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவையைக் கையாள்வதில் சிறந்து விளங்கினார். 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'என்று கூறினார்.

வினாக்கள்:

12. நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படுவது __________

13. 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'என்று கூறியவர்_________.

14. என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் பெற்றோர் _____, _____

15. பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவையைக் கையாள்வதில் சிறந்து விளங்கியவர் __________ .

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி**: (6)

16. நவதானியங்கள் நாங்கின் பெயர்களை எழுதுக.

17. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் கிடைக்கின்றன?

18. பாதிப்பு என எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

**V. பின்வரும் துணைப்பாட வினாவிற்கு விடையளி:**

19. நேர்மை நிறைந்த தீர்ப்பு கதையின் கருத்தை **கட்டுரை** வடிவில் எழுதுக. (5)